# வேதாகமத்தை ஒரு ஒருங்கிணைந்த கருத்தொடராக வாசிக்க வேண்டும்
READ THE BIBLE AS ONE UNIFIED BOOK

Thursday Bible Study
ACA Avadi Church
14 March 2024

**சங்கீதம் 119:18**
உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும்.

**I கொரிந்தியர் 14:20**
சகோதரரே, நீங்கள் **புத்தியிலே குழந்தைகளாயிராதேயுங்கள்;** துர்க்குணத்திலே குழந்தைகளாயும், **புத்தியிலோ தேறினவர்களாயுமிருங்கள்.**

- வேதத்தை வாசித்து புரிந்து கொள்ள வேண்டும்:

**எபேசியர் 3: 5**
5. அதை நீங்கள் **வாசிக்கையில்** கிறிஸ்துவின் இரகசியத்தைக்குறித்து **எனக்கு உண்டாயிருக்கிற அறிவை அறிந்துகொள்ளலாம்**

- **வேதத்தை சரியாக வாசிக்காததினால் சதுசேயர் வேதத்தையும் தேவனுடைய வல்லமையும் தவறாக புரிந்து கொண்டனர்.**

**மத்தேயு 22:29**
29. இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்.

- **பரிசேயர்கள் வேதத்தை** சரியாக **வாசிக்காததினால், சீஷர்களிடத்தில் குற்றம் கண்டுபிடித்தனர்.**

**மத்தேயு 12:1–5**
1.அக்காலத்திலே, இயேசு ஓய்வுநாளில் பயிர்வழியே போனார்; அவருடைய சீஷர்கள் பசியாயிருந்து, கதிர்களைக் கொய்து, தின்னத் தொடங்கினார்கள்.

- **பரிசேயர்கள் வேதத்தை** சரியாக **வாசிக்காததினால் இயேசுவையே சோதிக்க முயற்சித்தனர்.**

**மத்தேயு 19:3–5**
3. அப்பொழுது, பரிசேயர் அவரைச் சோதிக்கவேண்டுமென்று அவரிடத்தில் வந்து: புருஷனானவன் தன் மனைவியை எந்த முகாந்தரத்தினாலாகிலும் தள்ளிவிடுவது நியாயமா என்று கேட்டார்கள்.

**I தீமோத்தேயு 4: 13**
13. நான் வருமளவும் **வாசிக்கிறதிலும்** புத்திசொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு.

வேதத்தில் உள்ள மொத்தம் 66 புத்தகங்கள், சுமார் 40 ஆசிரியர்களால், 1500 ஆண்டு இடைவெளியில் எழுதப்பட்டது.
ஆனால் அது…
• ஒரே புத்தகமே
• ஒரே ஆசிரியரால் ஏவப்பட்டது —பரிசுத்த ஆவியான தேவன் (2 தீமோ. 3:16)
• தேவனுடைய குமாரனாக அவதரித்த, இயேசு கிறிஸ்து என்ற ஒரே ஒருவரை பற்றியது (லூக்கா 16:31; 24:27, 44; யோவான்.5:46).
• அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரே கருப்பொருளை (காரியத்தை) சொல்லுகிறது.

• மனுக்குலத்தை சிருஷ்டித்த ஒரே தேவனயும், அந்த தேவனை எதிர்த்து மனுக்குலம் செய்த கீழ்ப்படியாமையையும் மற்றும் அதின் நிமித்தம் ஏற்பட்ட அழிவுகளைப் பற்றிய கருத்தொடர்.
• ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரை தேவன் இந்த உலகத்தை புதிதாக்கும் செயல் வரை வர்ணிக்கிறது.
• இவை அனைத்தையும் தேவன் பங்குபங்காகவும் வகைவகையாகவும் திருவுளம்பற்றினார்

**எபிரெயர் 11:1-4**

1. பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், 2. இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்.

• ஒரு அழகான மனதை நமக்கு அறிமுகப்படுத்தி, அனைத்து உண்மைகளின் (யதார்த்தத்தின்) ஆசிரியர் தேவன் என்று அழைக்கப்படுகிறார் என்கிற பதிவோடு வேதம் ஆதியாகமத்தில் துவங்குகின்றது.
• இருண்ட ஒழுங்கற்ற உலகத்தில் இருந்து, ஒழுங்கும் அழகுமான ஜீவன் நிறைந்த ஒரு தோட்டத்தை வெளிக்கொணரும் (உருவாக்கும்) வல்லமை அவரிடத்தில் இருந்தது.
• நிறைவுக்கு (முடிவுக்கு) மகுடம் சூட்டும் வண்ணமாக தேவன் "**மனுக்குலம்**" என்கிறதான சிருஷ்டிப்பை நியமித்தார்.
• இவர்கள் தேவனின் சார்பாக இந்த அழகான உலகத்தை ஆண்டு கொள்ளும்படியாகவும் , தங்கள் முழு திறனையும் பயன்படுத்தி, அதை ஒழுங்குபடுத்தவும் நியமிக்கப்பட்டனர்.
• தேவனோடு பங்காளர்களாய் சேர்ந்து, நன்மை தீமை அறியத்தக்க அவருடைய அறிவின் மீது நம்பிக்கை கொண்டு, சுதந்திரத்தை காணும்படிக்கு அவர்களுக்கு ஒரு தேர்ந்தெடுப்பு கொடுக்கப்பட்டது.
• நன்மை தீமைகளை தாங்களாகவே சுயமாக வரையறுக்க முயன்றால் அவர்களை அது கொன்றுவிடும் என்று தேவன் எச்சரிக்கிறார் .
• ஆனால் மனிதனோ பொய்யாணைனிமித்தம் தங்களை வஞ்சிக்கிற பிசாசின் சத்தத்தைகேட்கிறார்கள்.
• **ஆதியாகமம் 11:** இறுதியில் பாபிலோனில் (கோபுரத்தில்), வானத்திற்கு எட்டும்படி மனிதன் முயன்றபோது தேவன் இந்த கறையாக்கபட்ட மனுக்குலத்தை சிதறடித்தார்.
• ஆனால் அதே அதிகாரத்தில் பாபிலோனிலிருந்து வெளியே வந்த ஆபிரகாம் மற்றும் சாராள் என்கிறதான ஒரு மனிதன் மற்றும் மனுஷியை குறித்ததான கதையைப் பார்க்கும் படியாக நம்முடைய கவனம் திருப்பப்படுகிறது.

**ஆதியாகமம் 11:31**

31. தேராகு தன் குமாரனாகிய ஆபிராமையும், ஆரானுடைய குமாரனும் தன் பேரனுமாயிருந்த லோத்தையும், தன் குமாரன் ஆபிராமுடைய மனைவியாகிய தன் மருமகள் சாராயையும் அழைத்துக்கொண்டு, அவர்களுடனே ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்தைவிட்டு, கானான்தேசத்துக்குப் போகப் புறப்பட்டான்; அவர்கள் ஆரான்மட்டும் வந்தபோது, அங்கே இருந்துவிட்டார்கள்.

• இன்னொரு வாய்ப்பை பெறும்படியாக ஒரு புது ஜனம், ஒரு புது தேசம், அவர்களிடத்திலிருந்து வரும் என்று தேவன் வாக்குப்பண்ணுகிறார்.
• அவர்கள் இதில் வெற்றி பெற்றால் மீதமுள்ள மனுக்குலம் முன்னேறி செல்வதற்கு ஒரு புதியதொரு வழி திறக்கும்.
• ஆனால் தேவனுடைய தனிப்பட்ட வழிநடத்தல் இருந்த போதிலும் ஆபிரகாமின் குடும்பம் நன்மை தீமையை வரையறுக்கும் - காரியத்தில் தேவனை தவிர்த்து தங்கள் சுய முறைகளின்படி செய்ய முன்பு செய்யப்பட்ட அதே சோதனைக்கு இடமளித்துவிட்டார்கள்.
• பிற்காலத்தில், தெய்வீக ஞானம் பெற்று தேவனுடைய வழி நடத்துதலை விரும்பிய சிறந்த மனிதர்கள் (ராஜாக்கள்) அதிகாரத்தில் இருந்த போதும், ஆட்சி செய்த போதும் அவர்களும் தங்கள் சுய முறைகளின் படி செய்ய இடமளித்துவிட்டார்கள்.
• இஸ்ரவேலர் அவர்களுடைய சொந்த தீர்க்கதரிசிகளால் இப்படிப்பட்ட தான தேர்ந்தெடுப்பு (சுய தேர்வு) அவர்களை மறுபடியும் பாபிலோனுக்கு வழிநடத்தி விடும், இம்முறை சிறைபிடிக்கப்பட்ட அகதிகளாக வாழ்வார்கள் என்று எச்சரிக்கப்பட்டார்கள்.

**• ஏசாயா முதல் எசேக்கியா வரை.**

**II இராஜாக்கள் 20:16 -18**

16. அப்பொழுது ஏசாயா எசேக்கியாவை நோக்கி: **கர்த்தருடைய** வார்த்தையைக் கேளும். 17.
இதோ, நாட்கள் வரும்; அப்பொழுது உமது வீட்டில் உள்ளதிலும், உமது பிதாக்கள் இந்நாள்வரைக்கும் சேர்த்ததிலும் ஒன்றும் மீதியாக வைக்கப்படாமல் எல்லாம் பாபிலோனுக்குக் கொண்டுபோகப்படும். 18. நீர் பெறப்போகிற உமது சந்தானமாகிய உமது குமாரர்களிலும் சிலர் பாபிலோன் ராஜாவின் அரமனையிலே அரமனை வேலைக்காரராயிருப்பார்கள் என்று **கர்த்தர்** சொல்லுகிறார் என்றான்.

• கதை இன்னும் முடிந்து விடவில்லை என்று தீர்க்கதரிசிகள் சரியாக சொன்னார்கள்.
• அவர்களுடைய (இஸ்ரவேலர்) தோல்விகள் மறைக்கப்படும்படியாகவும், ஜனங்களுடைய இருதயங்களும், எண்ணங்களும் மாற்றப்படும்படியாகவும், தேவன் அவர்களுக்குள் ஒரு புதிய தலைவரை அனுப்பப்போகிறார். அதினிமித்தம் அவர்களால் சரியான தேர்ந்தெடுத்தல் செய்ய முடியும். • இஸ்ரவேலின் ராஜாக்களின் வம்சத்தில் வந்த நாசரேயனாகிய இயேசு என்கிற ஒரு மனிதருக்கு நாம் அறிமுகப்படுத்தப்படுகிறோம்.
• மேலும் இந்த வாக்குத்தத்தங்கள் அனைத்தையும் தாம் நிறைவேற்றப் போவதாக அவர் கூறினார்.
• சிலுவையின் மரணபரியந்தமும் அவருடைய கீழ்படிதலினிமித்தமாக அவர் பிசாசை எதிர்கொண்டார், எதிர்த்தார், மற்றும் பிசாசின் மீது முற்றிலும் ஜெயம் கொண்டார்.

• வேதம் எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது என்பதை விவரிக்கும் ஒரு பயனுள்ள வழியை நாம் பொதுவாக **நான்கு அத்தியாய சுவிசேஷங்கள்** என்று அழைப்போம். **சிருஷ்டிப்பு , விழுகை, மீட்பு, மறுசீரமைப்பு.**

• சிருஷ்டிப்பு: **காரியங்கள் எப்படி இருந்தது** என்பதை விளக்குகிறது.
• விழுகை: **காரியங்கள் எப்படி இருக்கின்றன** என்பதை விளக்குகிறது
• மீட்பு: **காரியங்கள் எப்படி இருக்க முடியும்** என்பதைக் காண்பிக்கிறது.
• மறுசீரமைப்பு: **காரியங்கள் எப்படி இருக்கும்** என்பதைக் காண்பிக்கிறது.

**சிருஷ்டிப்பு (உருவாக்கம்): (அத்தியாயம் 1)**
• ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். (ஆதியாகமம் 1:1).
• தேவன் இயற்கை மற்றும் இயற்கைக்கு அப்பாற்பட்ட உலகம் இரண்டையும் படைத்தவர்.
• தேவன் எப்போதும் பரிபூரண அன்பில் இருக்கிறார் (எபேசியர் 1:1)
• தேவன் பேசினார், ஒன்றும் இல்லாமையில் இருந்து இந்த உலகம் தோன்றினது.
• அவர் தனது சாயலில் ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார் (ஆதியாகமம் 1:28)
• தேவன் தன்னுடைய சிருஷ்டிப்பின் மத்தியில் பிரிந்திராமல் அல்லது வெற்றிடமின்றி வாசம் பண்ணினார்.

**வீழ்ச்சி (அத்தியாயம் 2)**
• இப்படிப்பட்ட எல்லா ஆச்சரியமான சிருஷ்டிப்புக்கள் இருந்த போதிலும் நம்முடைய ஆதி பெற்றோர்கள் தேவனுக்கு கீழ்ப்படியாமல், தேவனுடைய மகிமையை தங்கள் சொந்த மகிமைக்கு பரிமாற்றம் செய்து கொண்டனர் (ஆதியாகமம் 3).
• அவர்கள் ஏதேன் தோட்டத்திலிருந்து அகற்றப்பட்டனர், மரணம் உலகில் நுழைந்தது, சிருஷ்டிகருக்கும், சிருஷ்டிகளுக்கும் இடையே உள்ள உறவு துண்டிக்கப்பட்டது. மனுக்குலம் அது முதல் தேவனை மகிமைப்படுத்தி மகிழ்ச்சி கொள்ளவில்லை.
• ஒரு நபரும் பாவத்தைத் தவிர்க்கவில்லை, மாறாக, எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி போனார்கள். (ரோமர் 3:10, 23).
• சொர்க்கம் இழக்கப்பட்டது (தொலைந்தது).
• பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் 6:23).
• நரகம், அதனுடன் சேர்ந்து நித்திய தண்டனை, அழிவு, மற்றும் வெளியேற்றப்படுதல் அதின் விளைவாகும். (வெளிப்படுத்துதல் 19 -20).
• இப்போது எல்லா சிருஷ்டிகளும் ஒருவித மீட்புக்காக உள்ளாக ஏங்கித் தவிக்கிறது (ரோமர் 8: )

**மீட்பு (அத்தியாயம் 3)**
• தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, விழுந்து போனவர்களுக்கு நற்செய்தியை கொண்டு வருவனிதிமித்தம் தம்முடைய கிருபையை பொழிந்தருளினார். (எபேசியர் 2:4).
• தேவன், இயேசு கிறிஸ்து மூலமாகவும் அவருடைய கிரியையின் மூலமாகவும் இரட்சிப்புக்கு ஒரு வழியை உண்டாக்கினார்
• இழந்து போனதை மீட்கும் படியாக ஒரு பூரண குமாரன், ஒரு பூரண தீர்வை காண, ஒரு பூரண மனிதனாக சிலுவையிலே ஒரு பயங்கரமான (கொடூரமான) மற்றும் அவமானமான மரணத்தின் மூலம் மரிக்க வேண்டும் (யோவான் 3:16; கொலோ. 2:9;ரோமர் 5:8; 2 கொரிந்தியர் 5:21).

• கிறிஸ்து நம் கடனை செலுத்திவிட்டார், அவர் நம்முடைய தண்டனையை நமக்கு மாற்றாக எடுத்துக் கொண்டார், மேலும் அவர் நம்மை சுத்தமற கழுவும்படியாக உயிர் பலியாக மாறினார்.
• சர்பத்தை நசுக்குபவர் சாத்தானின் தலையை நசுக்கினார். அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட தன்னுடைய ஜனத்தை தன் சொந்த இரத்தத்தினாலே கிரயமாக கொண்டார் (ஆதியாகமம் 3:15; ரோமர் 16:18-20)

**மறுசீரமைப்பு (அத்தியாயம் 4)**

• அத்தகைய மீட்பின் இறுதி பரிசு, நாம் தேவனுடன் ஒப்புரவாகியுள்ளோம் (கொலோசெயர் 1:21-22).
• எல்லா தூதர்களும் , எல்லா ஜாதிகளும், எல்லா கோத்திரத்தாரும், எல்லா மொழி பேசுபவர்களும், எல்லா தேசத்திலும், இருக்கிற ஜனங்களும் , "பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், என்றும் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவரே!" பாத்திரராயிருக்கிறார் என்றும், பாடல்களை பாடி அவர்களுடைய மகா பெரிய தேவனுக்கு ஆராதனை செய்யும்படியாக ஒன்றாக கூடி வந்து நிற்பார்கள். (வெளிப்படுத்துதல் 7).
• தேவன் அவர்கள் கண்ணீர் யாவற்றையும் துடைத்து அவர்கள் எல்லா சத்துருக்களையும் அவருடைய பாதபடியாக்கி மற்றும் புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிப்பார். (வெளிப்படுத்துதல் 21-22).
• நாம் மறுபடியும் அவரோடே கூட வாசம் பண்ணுவோம் மற்றும் அவருடைய முகத்தை நாம் காண்போம்.

**வேதத்தை ஒரு ஒருங்கிணைந்த கருத்தொடராக படிப்பதன் நன்மைகள்:**

1. ஒருங்கிணைந்த கருத்தொடர் எல்லா மனிதர்களுக்கும், எல்லா காரியங்களுக்கும் அர்த்தம் கொடுக்கிறது.
2. இது நம் இதயத்தை அழுத்துகிற கேள்விகளுக்கு பதிலளிக்கிறது: நான் ஏன் இங்கே இருக்கின்றேன்? என் வாழ்க்கையை குறித்து தேவனின் நோக்கம் என்ன? ஏன் உலகம் இவ்வாறாக உடைக்கப்பட்டு(பிளவுபட்டு) இருக்கிறது?
3. நாம் தேவனுடைய ஜனங்களாக நமக்கு இருக்கும் பங்கை குறித்ததான அடையாளத்தை புரிந்து கொள்வதை சாத்தியமாக்குகிறது.
4. நாம் கொண்டுள்ள அன்பின் வெளிச்சத்தில் எப்படி நாம் வாழ முடியும் என்பதை விளக்க உதவுகிறது.